DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 347/2025**

**eposition of LW5 examined as PW3** (மகசர் சாட்சி) Dt. 23.03.2026

| | |
|---|---|
| Name | பன்னீர்செல்வம் |
| Father's Name | அந்தோணிமுத்து |
| Village | கோமல் |
| Taluk | குத்தாலம் |
| Age | 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 23.03.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. நான் ஒரு நாள் எனது வயலுக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டுக்கு வந்து கொண்டிருந்த போது எனது வீட்டுக்கு பக்கத்தில் கூட்டமாக இருந்தது. போலீசார் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் எதுவும் எழுதிபட்டிருந்ததா என்றால் வெற்று தாளில் தான் கையொப்பம் செய்தேன்.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

கடந்த 01.07.2022 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது பாலையூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் என்னையும், ெ ஹன்றிஸையும் அழைத்து அன்றைய தினம் மாலை 5.15 மணிக்கு எண் 29A மகளிர் விடியல் பயண பேருந்து டிரைவர் முருகவேலுவை ஆஜர் எதிரி செந்தில் தாக்கி கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பாக எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் பார்வை மகசரில் நானும் ெ ஹன்றிஸ்-ம் சாட்சி கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது ஊரை

A.பன்னீர்செல்வம்

23/3/26

சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சி.பன்னீர் செல்வம்

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

23/3/24

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை